بسم الله الرحمن الرحيم

அருளாளன், அன்புடையோன் அல்லாஹ்வின்
திரு நாமம் கொண்டு ஆரம்பிக்கிறேன்.
அல்லாஹு ஜல்ல ஜலாலுஹு

# அல் குர்ஆன் ஞான மணிக் கோவை

REFERENCE

## முதலாம் பாகம்

தொகுப்பாசிரியர் ;
அபுல்கலாம் அல்ஹாஜ்
ஸெய்யித் பழீல் மௌலானா J. P.
ஓய்வு பெற்ற அதிபர் - கல்வி அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J
பொது நூலக
கல்முனை
10-8-1992

بسم الله الرحمن الرحيم

அருளாளன், அன்புடையோன் அல்லாஹ்வின்
திரு நாமம் கொண்டு ஆரம்பிக்கிறேன்.

அல்லாஹு ஜல்ல ஜலாலுஹு

# அல் குர்ஆன்
# ஞான மணிக் கோவை

## முதலாம் பாகம்

தொகுப்பாசிரியர் :
அபுல்கலாம் அல்ஹாஜ்
அஸ்ஸெய்யித் பழீல் மௌலானா J. P
ஓய்வு பெற்ற அதிபர் - கல்வி அதிகாரி

வெளியீடு :
முனைப்பு அச்சகம்
மருதமுனை.

2ம் பாகம் இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
13718

# AL - KURAN
## GNANAMANIK KOVAI.
(Collection)

By

**Abulkalam Al - Haj Asseyid Faleel Moulana J.P**
(Rtd principal, Education Officer)

**'Moulana Mahal'**
**Mashoor Moulana Road,**
**Maruthamanai**
**Kalmunai.**

**Fist Edition : 31 December 95.**
**Authors' 75th Birth Day.**

ACCESSION NO: 13718
CLASS NO: 297.5 1225

Printed By
**Munaipu Printers.**
**Main Street**
**Maruthamunai**
**Kalmunai**
**Sri Lanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

'பிஸ்மில்லாஹிர்ரஹ்மா னிர்ரஹீம்'
அல்ஹம்து லில்லாஹ் - வஷுக்ருன் லில்லாஹ்,

# முன்னுரை

## அன்புக் காணிக்கை சமர்ப்பணம் :

பெற்று வளர்த்து பேரன்பு காட்டிய அன்னை ஆயிஷா அம்மையாருக்கும் - போற்றி வளர்த்து பொன் வழிகாட்டிய என் தந்தை சங்கைக்குரிய மௌலானா மௌலவி அல் ஹாஜ் அஸ்ஸெய்யித் ஐதுரூஸ் அல் அஹ்தலுல் யமானி பாகவி அவர்களுக்கும், ஈருலகப் பேறு பெறும் உயர் கல்விக்கும் மார்க்க ஞானத்திற்கும் உறுதுணையாக இருந்து உரமூட்டிய உத்தமர்களான சகோதரர்கள், மௌலவி அஸ்ஸெய்யித் முகம்மத் ஸாலிஹ் மௌலானா பஹ்ஜி (மத்ரஸா மௌலானா) அவர்களுக்கும், அஸ்ஸெய்யித் செயின் மௌலானா (மௌலானா விதானை) அவர்கட்கும் ''அல்-குர்ஆன் ''ஞான மணிக்கோவை'' என்னும் இப் புனித சிறு நூலை எனது அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறேன். நான்கு நல்லடியார்கட்கும் அல்லாஹ் தனது மேலான 'பிர்தௌஸ்' சுவர்க்கத்தின் பெருவாழ்வை அளிப்பானாக!

137/8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமறையாம் பெருமறை அல்குர்ஆனின் ஞான மணி கள் தமிழ் கூறும் நல்லுலகின் ஜோதியாகப் பிரகாசிக்க வேண்டுமென்ற பேர் அவாவுடன் இப்புனித நூலை அச்சு வாகனம் ஏற்றியுள்ளேன். பல மாதங்களாக தர்ஜுமதுல் குர்ஆனை ஓதி வாசித்து தெரிவு செய்த ஞானமணிகளில், சிலவற்றை இந்நூலில் கோவை செய்துள்ளேன். தட்டச்சுப் பிரதியை பார்வையிட்டு சரிகாணும்படி தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர். மௌலவி M. S. M. ஜலால்தீன் கபூரி B. A. Hon. அவர்களை வேண்டினேன். இருமாதங்கள், செலவிட்டு பிழை திருத்தங்களைச் செய்து, பாராட்டி வழிகாட்டி அச்சிட்டு பிரசுரிக்கும்படியும் வேண்டிக் கொண்டார்கள். திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட தட்டச்சுப் பிரதியை மீண்டும் ஒருமுறை மௌலவி அல்ஹாஜ் A. M. ஹஸன் மௌலவி ஷர்கிய்யி J. P. அவர்கள் பார்வையிட்டு ஒப்புதல் நல்கினார்கள். இரு பெரும் மௌலவிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புனிதமாகவும் அழகாகவும் சிறப்பாகவும் இந்நூலை அச்சிட்டு உதவிய முனைப்பு அச்சக உரிமையாளர் - அஸ் ஸெய்யித் ஹஸனுல் பாரி மௌலானா B. A அதிபர் அவர்கட்கும், அவர்களின் இருபுதல்வருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்து நன்றியும் கூறுகிறேன்.

அபுல்காலம் அல்ஹாஜ் I. M. S. M. பழீல் மௌலானா J. P.
'மௌலானா மஹால்'
மஷூர் மௌலானா வீதி
மருதமுனை.

31. 12. 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# அணிந்துரை

இலங்கை இஸ்லாமிய வரலாற்றில் கிழக்கு இலங்கையின் புகழ்பூத்த தலமாகிய மருதூரில் ''அஹ்தலி'' மவ்லானா குடும்பத்தின் தாபகர் சங்கைக்குரிய மௌலானா மௌலவி அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் இதுரூஸ் அல் அஹ்தல் (பாகவி) அவர்களின் வழித்தோன்றல் அஸ்ஸெய்யித் பழீல் மௌலானா அவர்களை நான் எனது இளமையிலிருந்து தெரிந்து வைத்துள்ளேன். இவர்களின் தாய்மாமன் மர்ஹூம் I. M. M. ஷம்சுதீன் (மரைக்காயர் டிரஸ்டி பொருளாளர் மஸ்ஜிதுல் கபீர்) அவர்களின் இளைய புதல்வனாகிய நான் எனது மச்சான் முறையான அபுல்கலாம் அவர்களை ஒரு கல்விமானாக - சன்மார்க்கப் போதகராக, அறிநெறிவாழ் பெரியாராக. சமூகசேவையாளராக நன்கு மதித்து மட்டற்ற மரியாதையுடன் பல்லாண்டு காலமாக பழகி வருகிறேன். மருதமுனையின் பெருமகன்களில் ஒருவராகிய இவர்கள் நமது தாயகத்தின் ஆரம்பகால பயிற்றப்பட்ட ஆசிரியர். கொழும்பு ஸாகிறா கல்லூரியில் 1945ம் ஆண்டு அக்கால அதிபர் DR. T. B. ஜாயா B. A. அவர்களின் நல்லாசி பெற்று அக்கல்லூரியில் தமது ஆசிரியத் தொழிலை ஆரம்பித்தார்கள்.

அதிபர், கல்விஅதிகாரி பதவிகளை செவ்வனே நிறைவேற்றி இலங்கையின் நன்கு அறியப்பட்ட இவர்களின் முதலாவது சன்மார்க்க எழுத்தோவியத்திற்கு அணிந்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதில் மிகவும் பெருமையடைகிறேன். அபுல்கலாம் அவர்கள் அழகு தமிழில் மட்டுமல்ல ஆங்கிலம், சிங்களம் மொழிகளிலும் சரளமாக உரையாடும் திறமை கொண்டவர்கள். மீலாத் மேடைகளில், கல்வி மாநாடுகளில், கவியரங்குகளில், சமூக சேவைத்துறைகளில் இவர்கள் ஆற்றியுள்ள சொற்பொழிவுகளின் சாராம்சங்களை தொகுத்தாலே மிகவும் பெறுமதியான, சிறப்புமிக்க நூலொன்றை ஆக்கிவிடலாம்.

அபுல்கலாம் மௌலானா அவர்களால் தொகுக்கப்பட்ட தட்டச்சுப் பிரதிகள் எனக்குத் தரப்பட்டது. அல்குர்ஆனின் ஞானமணிக்கோவை என்று திருநாமம் சூட்டப்பட்டுள்ள தட்டச்சு நூலுக்கு தகவுரை, அணிந்துரை தருமாறு கேட்கப்பட்டேன். பிரதிகளை இரண்டு மாதங்கட்கு மேலாக பலமுறை படித்து அல்குர் ஆனின் திருவசனங்களுடன் ஒப்பு நோக்கினேன்! சிறு சிறு தவறுகளைத் திருத்தியும்- மொழி வழிகளை மாற்றியும், சூராக்கள், ஆயத்களின் வரிசைக் கிரமங்களை சரிசெய்தும் எனக்குத் தரப்பட்ட புனித கடமையை முடித்துள்ளேன்.

2- அல்குர் ஆன் சொல் அகராதியில் 2700 குர்ஆன் சொற்கள் தெரிவு செய்யப்பட்டு அரபு-தமிழ்- ஆங்கிலம் மும்மொழிகளிலும் அழகுற எழுதப்பட்டுள்ள கையெழுத்து ஏட்டையும் கவனமாகப் பார்வையிட்டேன். ஜுஸ்உ, சூரா-ஆயத் இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளபடியால் எளிதில் எவரும் குறிப்பிட்ட சொல்லின் ஆங்கில-தமிழ் கருத்துக்களை அறிந்து கொள்ளலாம்.

3. மௌலானா A. யூசபு அலி அவர்களின் Holy Quran சர்வதேச புகழ் பெற்றது. மௌலானா அவர்களின் ஆங்கிலக் கவிதைகள் இன்னும் பெரும் புகழ் பெற்றன. இவற்றில் 70 கவிதைகளை அபுல்கலாம் மௌலானா அவர்கள் தமிழில் தழுவல் செய்திருப்பதைப்படித்து ஆச்சரியமடைந்தேன்.

4. அறநெறி ஆசாரக்கோவை 60 நாலடிக் கவிதைகளாக நயம்பட ஆக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அஸ்மாஉல் ஹுஸ்னா ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பும் இவர்களின் ஆக்கங்களாகும். இவற்றையும் நான் ஆய்வு செய்தேன். ஆலிமாக அல்லது மௌலவியாக இல்லாதிருந்தும் மிகவும் கவனத்துடனும். அடக்கத்துடனும் செய்யப்பட்டுள்ள இப்படைப்புக்களை முன்னாள் முஸ்லிம் கலாச்சார அமைச்சர் அல்ஹாஜ் M. H. முகம்மத் அவர்களும் பணிப்பாளர் அல்ஹாஜ் அன்ஸார் அவர்களும் பாராட்டியுள்ளார்கள்.

தனது அன்புத் துணைவியை இழந்த வேதனையில் கால் ஊன்றி வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் அபுல் கலாம் மௌலானா அவர்கள் படைத்துள்ள இப்புனித ஏடுகள் இவர்களின் அறிவியல் பணியின் அக்கறையையும், திறமையையும் எடுத்துக் காட்டுகின்றன. 74 வயதையுடைய இப்பெரியாரின் 'அல்குர்ஆன் ஞானமணிக் கோவை' நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டுமென பிரார்த்த செய்கிறேன்.

அல்லாஹுதஆலா இவர்களின் நற்சேவைகளை கபூல் செய்து நற்பாக்கியங்களை அருள்வானாக!

நன்றி - வஸ்ஸலாம்

மௌலவி M. S. M. ஜலால்தீன் கபூரி B. A. (Hon)
'கப்னாஸ்' விரிவுரையாளர்
மெயின் வீதி கிழக்கு பல்கலைக்கழகம்
சாய்ந்தமருது 1995. 05. 05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே

அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு

01 = 05

அல்குர்ஆனில் வல்லோனின் விதந்துரைகள்

06 — 15

குர்ஆனின் சிறப்பியல்புகள்

16 — 19

திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்பதின் ஒழுங்கு

20 — 23

அல்குர்ஆனின் உருவமைப்பு, உட்பிரிவு

24 — 34

மாநபி பற்றி மாமறை

35 — 37

வான் மறையின் விஞ்ஞான வித்துக்கள்

38 — 41

அல் குர்ஆன் தீன்வழி நிற்போம்

42 — 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹு

01 அல்லாஹ் - அவனைத்தவிர வணக்கத்துக்குரிய வேறு நாயன் இல்லை. அவனுக்கு அழகான அஸ்மாஉல் ஹுஸ்னா - திருநாமங்கள் இருக்கின்றன. (அவைகளில் எதனைக் கொண்டேனும் அழையுங்கள்) 20 : 8
''அல்லாஹு லாஇலாக இல்லாஹுவ லஹுல் அஸ் மாஉல் ஹுஸ்னா''

02 நாம்தான் மனிதனைப் படைத்தோம், அவன் மனதில் உதிக்கும் எண்ணங்களையும் நாம் அறிவோம், அவனது பிடரியிலுள்ள உயிர் நரம்பையும் விட நாம் அவனுக்கு சமீபமாக உள்ளோம். - அல்குர்ஆன்.

03 நீங்கள் என்னைத் தியானியுங்கள்; நான் உங்களை நினைத்து அருள்புரிவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்திவாருங்கள் நிராகரிப்போராகிவிடாதீர்கள். 2 : 152

04 அவன் பாவங்களை மன்னிப்பவன் மன்னிப்புக்கோரலை அங்கீகரிப்பவன். வேதனை செய்வதிலும் கடுமையானவன். அருள்புரிபவன் அவனைத்தவிர வேறு நாயன் இல்லை. அவனிடமே யாவரும் செல்லவேண்டியிருக்கிறது. 40 : 3

05 ஆதியும் அவனே; அந்தமும் அவனே; தோற்றுவதும் அவனே; மறைந்திருப்பதும் அவனே; அவன் சகலவற்றையும் அறிந்தோன். 57: 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 அல்லாஹ்வைத்தவிர வேறுநாயன் இல்லை; (அவன்) இரகசியத்தையும் பரகசியத்தையும் நன்கு அறிந்தவன்; அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன். 59:22

07 ............... அவன்தான் மெய்யான அரசன்; பரிசுத்தமானவன்; சாந்தியும் சமாதானமும் அளிப்பவன்; அபயமளிப்பவன்; இரட்சகன்; மிகைப்பவன்; பெருமைக்குரியவன்; இவர்கள் கூறும் இணைதுணைகளைவிட்டும் அல்லாஹ் மிகப்பரிசுத்தமானவன். 59:23

08 அல்லாஹ்தான் சிருஷ்டிகர்த்தா; ஒழுங்கு செய்வோன்; உருவத்தை அமைப்போன்; அவனுக்கு வேறு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. வானங்களிலும் பூமிகளிலும் உள்ளவைகள் யாவும் அவனையே துதி செய்கின்றன. அவன் மிகைத்தவன், ஞானமுடையோன். 59:24

09 இடியும் அவன் புகழ் பாடுகிறது. அவனுக்குப் பயந்து மற்ற மலக்குகளும் அவனைத்துதி செய்து புகழ்கின்றனர். ''வயுஸப்பிஹுர்ரஃது பிஹம்திஹி வல் மலாயிகது மின் ஹீபதிஹி'' 13: 13

10 வானங்களிலும் பூமியிலும் இருப்பவை யாவும் (அவை) விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அல்லாஹ்வுக்கு சிரம்பணிந்து (வழிபட்டே) தீரும். காலை மாலை நேரங்களில் அவற்றின் நிழல்களும் அவனுடைய கட்டளைக்கு வழிபட்டே முன் பின் செல்கின்றன. 13: 15

11 பூமியிலுள்ள யாவும் அழிந்தே போகும்; மிக்க கண்ணியமும் பெருமையும் தங்கிய உமதிறைவன் மட்டும் (அழியாது) நிலைத்திருப்பான். 55:26 , 27

12 ............... ஆதலால் அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யவும். என்னையே விசுவாசிக்கவும். அதனால் அவர்கள் நேரான வழியை அடைவார்கள். 2:186



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 அல்லாஹ் (நேருக்கு நேராகப்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்குமில்லை. எனினும் வஹியின் மூலமோ, அல்லது திரைக்கப்பாலிருந்தோ, அல்லது தான் விரும்பியதை தன் அனுமதியின் மீது வஹியை (பெற்று) அறிவிக்கக் கூடிய ஒரு தூதரை அனுப்பிவைத்தோ (மனிதரிடம் பேசுகிறான்) நிச்சயமாக அவன் மேலானவனும் ஞானமுடையோனுமாக இருக்கிறான். 42 : 51

14 இறந்து உக்கி மண்ணாய்ப்போன எலும்புகளை நாம் ஒன்றுசேர்க்க மாட்டோம் என்று மனிதன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். அன்று அவனுடைய விரல் நுனியைக்கூட (முன்னிருந்தவாறே) சரிப்படுத்த நாம் ஆற்றலுடையோம், 75 : 3,4

15 மனிதர்களே! சாந்தியும் சமாதானமும் அளிக்கக்கூடிய வீட்டுக்கே அல்லாஹ் உங்களை அழைக்கிறான். (அவனுக்கு வழிபட்டு நடக்கும்) அவன் விரும்புகிறவர்களை (அதற்குரிய) நேரான வழியிலும் செலுத்துகிறான். 10:25

16 திருக்குர்ஆனில் 2698 இடங்களில் அல்லாஹ்வைப் பற்றிய விபரங்கள் உள்ளன.

(தர்ஜுமத்துல் குர்ஆன் 42ம் பக்கம்)

கலிமா தையிபா, கலிமா ஷஹாதா, கலிமா தம்ஜீத், கலிமா தௌஹீத் அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும் மகத்துவத்தையும் வல்லமையும் எடுத்தோதுகின்றன.

17 மனிதர்களே! உங்கள் இறைவனாகிய அந்த அல்லாஹ் தான் வானங்களையும் பூமிகளையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷின் மீது தன் ஆட்சியை நிலை நாட்டினான்.......

அல்லாஹ் தூய்மையானவன்; அவன்வசமே சகல ஆட்சி அதிகாரம்; அவன்பாலே யாவரும் மீளுவர். 10:3

18 ............... நிச்சயமாக நீங்கள் என்னைத் தியானியுங்கள் நானும் உங்களை நினைத்து அருள் புரிவேன். நீங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எனக்கு நன்றி செலுத்தி வாருங்கள்; நன்றி செலுத்தாத நிராகரிப்போராகிவிடாதீர்கள். 2: 152

19 நிச்சயமாக நாங்கள் (அல்லாஹ்) ஒருவனுக்கே முற்றிலும் வழிபட்ட முஸ்லீம்கள் என்று சாட்சியம் கூறுவீர்களாக! 3:64

20 இறைகூறும் நேரானவழி (ஸிராத்தல் முஸ்தகீம்) எது?
''நான் மனிதனுக்கு மிகச் சமீபமாக இருக்கிறேன்
அவன் என்னை அழைத்தால் நான் விடையளிப்பேன்.
என்னிடமே அவன் பிராத்திக்கட்டும்
என்னையே விசுவாசிக்கட்டும்; அதனால்
அவன் நேரான வழியை அடைவான். 2 : 186

21 அல்லாஹ்வின் புகழ் வரிசைகளில் சில இதோ: முன் இரவிலும் நடுப்பகலிலும் வானங்களிலும் பூமியிலும் உள்ளயாவும் துதி செய்து புகழும் புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. 30 : 18

22 'ஸலாமுன் கௌலம் மின்றப்பிர்ரஹீம்'
நிகரற்ற அன்புடைய இறைவனால் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

23 நித்திய ஜீவன் - அல்லாஹ்
அவனே நித்திய ஜீவன்.
அவனைத் தவிர வேறு நாயன் இல்லை.
தூய மனதுடன் அவனையே அழையுங்கள்.
வழிபாடும் அவனுக்கே உரியது. 40 : 65

24 மரணமற்றநித்திய ஜீவனாகியஅல்லாஹ் ஒருவனையே நீர் நம்பும். அவனுடைய புகழைக்கூறி
அவனையே துதிசெய்து கொண்டிரும்
தன் அடியார்கள் இழைத்த பாபங்களின்
தாரதம்மியங்களை அவனே நன்கு அறிவான்.

25 ''வஃபுதுல்லாஹ் வலாதுஷ்ரிகூ பிஹி ஷய்ஆ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வையே துதியுங்கள் - தொழுங்கள் அவனுக்கு யாதொன்றையும் இணைவைக்காதீர்கள் 4 : 36

26 ............ எவன் தன் இறைவனின் லிகாவை சந்திக்க ஆசைப்படுகிறானோ அவன் நற்கருமங்களைச் செய்து தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது அவனையே துதித்து வருவானாக. 18 : 110

27 அல்லாஹ் சாட்சி கூறுகிறான்; அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அன்றி அமரர்களும் நபிமார்களும் வேத ஞான அறிஞர்களும் இதனையே சாட்சி கூறுகிறார்கள். அல்லாஹ் மிகைத்தோன்; ஞானமுடையோன். 3 : 18

28 நிச்சயமாக எவர்கள் (மெய்யாகவே) பயபக்தி உடையவர்களாகவும் (தக்வா தாரிகளாகவும்) இருக்கிறார்களோ அவர்களுடனும் எவர்கள் பிறருக்கு நன்றி செய்கிறார்களோ அவர்களுடனும் தான் அல்லாஹ் இருக்கிறான். 46 : 128

29 பூமியிலோ வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவும் உமது இறைவனுக்குத் தெரியாமல் தவறி விடுவதில்லை; இவற்றைவிடச் சிறியதோ பெரியதோ அவனுடைய தெளிவான பதிவுப் புத்தகத்தில் பதியப்படாமலில்லை. 10: 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனில் வல்லோனின் விதந்துரைகள்

01 ''அல்குர்ஆன் - முபாரக்கானது. இது வேதகிரந்தம். நாம்தான் இறக்கினோம். 'பரகத்' உள்ளது. நாம் அருளிய மும்மறைகளையும் உண்மைப்படுத்துவது. உம் முல் குராவிற்கும் (பூமியில் தாய், நகரங்களின் தாய், மக்கா)அதனைச் சூழவுள்ள மக்களுக்கும் எச்சரிப்பதற் காக அருளினோம். 6 : 93

02 ஜிப்ரீல் மூலம் நமது அடியாரின் இதயத்தில் இறக்கி னோம். அவர் தமது கட்டளைப்படி இதனை மனனம் செய்தார். (நேரான ஸிராத்தல் முஸ்தகீம்) வழியை அறிவித்து விசுவாசிகட்கு நன்மாராயனம் கூறுகிறது.

03 அல்குர்ஆன் அல்லாஹ் அல்லாதவைகளால் தரப்பட்டி ருந்தால் அதில் அநேக தவறுகளும் முரண்பாடுகளும் இருக்கும்.

04 'இன்னா அன்ஸல்னா இலைக்கல் கிதாப பில்ஹக்கி' முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இக்கிரந் தத்தை நாமே உம்மீது அருளியுள்ளோம். 4 : 105

05 மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. (உங்கள்) இதயங் களிலுள்ள நோய்களுக்கு அது ஒரு சஞ்சீவியாகும். மேலும் (அது) விசுவாசம் கொண்டவர்களுக்கு நேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி காட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது. 10:57

06 (இதனை) அல்லாஹ்வின் அருளாகவும், அவனுடைய அன்பாகவும் பாவித்து இதற்காக அவர்கள் சந்தோசமடையட்டும். இது அவர்கள் சேகரித்து வைத்திருக்கும் (மற்றப் பொருட்கள்) யாவையும்விட மிக்க மேலானது.

07 (அரபிகளே,) நீங்கள் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு குர்ஆன் என்னும் இவ் வேதத்தை நாமே உங்களுக்கு அறபு மொழியில் இறக்கி வைத்தோம். 12:02

08 (நபியே இது) வேத நூல் இதனை நாமே உம்மீது அருள் செய்திருக்கிறோம். (இதன்மூலம்) மனிதர்களை, அவர்களுடைய இறைவனின் கட்டளைப் பிரகாரம் இருள்களிலிருந்து வெளியேற்றி, பிரகாசத்தின்பால் நீர் கொண்டு வருவீராக. (அப்பிரகாசமோ) மிக்க புகழுக்குரிய அல்லாஹ்வாகிய யாவரையும் மிகைத்தோனின் நேரான வழியாகும். 14 : 1

09 குர்ஆனை ஓத ஆரம்பித்தால் (அதற்கு முன்னதாக) வெருட்டப்பட்ட ஷைத்தானைவிட்டு காக்கும்படி அல்லாஹ்விடம் கோரிக் கொள்ளும். 16 : 98

10 மெய்யாகவே இதை உம்மிறைவனிடமிருந்து ''ரூஹுல் குத்ஸ்'' என்னும் ஜிப்ரீல் தான் இறக்கி வைத்தார் என்று நீர் கூறுவீராக (இந்தக் குர்ஆன் இறைவனுக்கு) விசுவாசம் கொண்டவர்களை உறுதிப்படுத்துவதற்காகவும், முற்றிலும் வழிப்பட்டோருக்கு நேரான வழியாகவும் நன்மாராயனமாகவும் இருக்கிறது. 16 :120

11 ''வகுல் ஜாஅல் ஹக்கு வஸஹகல் பாதில் இன்னல் பாதிலகான ஸஹூக்கா'' சத்தியம் வந்தது - அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும். அல்குர்ஆன்

12 விசுவாசம் கொண்டோருக்கு அருளாகவும் பரிகாரமாகவும் உள்ளவைகளையே இந்தக் குர்ஆனில் நாம் இறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியிருக்கிறோம். எனினும் அக்கிரமக்காரருக்கு (இது) நஷ்டத்தையன்றி அதிகரிப்பதில்லை. 17:82

13 நபியே, நீர்கூறும்; மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து இதைப் போன்ற ஒரு குர்ஆனைக் கொண்டு வர முயற்சித்து அவர்கள் சிலருக்கு சிலர் உதவியாக இருந்த போதிலும் இதைப் போல் அவர்களால் கொண்டு வர (முடியவே) முடியாது. 17:88

14 முற்றிலும் உண்மையைக் கொண்டே இவ் வேதத்தை நாம் இறக்கினோம். அதுவும் உண்மையைக்கொண்டே இறங்கியது; நாம் உம்மை நன்மாராயனம் கூறுபவரா கவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அன்றி அனுப்பவில்லை. 17:105

15 நிச்சயமாக இதற்கு முன்னர் வேதங்களின் மெய்யான ஞானம் எவர்களுக்கு கொடுக்கப் பட்டதோ அவர்களி டம் இவ்வேதம் ஓதிக் காண்பிக்கப் பட்டால் அவர்கள் (இதனை) விசுவாசித்து முகம்குப்புற விழுந்து (எனக்கு) சிரம் பணிகின்றனர். 17:107

16 மனிதர்களுக்கு நீர் சிறிதுசிறிதாக ஓதிக் காண்பிக்கும் பொருட்டு இந்தக் குர்ஆனைப் பல பாகங்களாக நாம் பிரித்தோம். அதற்காகவே நாம் இதனை சிறுகச் சிறுக இறக்கி வைத்தோம். 17 : 106

17 புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் தான் தன் அடியார் முகம்மத் (ஸல்) மீது குர்ஆனை இறக்கி வைத்தான். அதில் அவன் எத்தகைய குறைபாட்டையும், கோணலையும் காணவில்லை.

18 மனிதர்களுக்கு இந்த குர்ஆனில் ஒவ்வோர் உதாரணத் தையும் விபரித்து இருக்கிறோம். எனினும் மனிதனோ அதிகமாக (வீண்) தர்க்கம் செய்வோனாகவே இருக்கின்றான். 18:54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 (நபியே இறைவனுக்கு பயபக்தியுடைய) அஞ்சக்கூடி யவர்களுக்கு ஒரு நல்லபதேசமாகவே இதனை அருள் செய்தோம். நீர் துன்பப்படுவதற்காக இந்தக் குர் ஆனை நாம் உம்மீது அருள் செய்யவில்லை.

20 இவ்வாறு தெளிவான வசனங்களாகவே இறக்கி வைத்தோம். நிச்சயமாக அல்லாஹ் தான் விரும்பி யவர்களையே இதன் மூலம் நேரான வழியில் செலுத் துகின்றான். 22 : 16

21 (நன்மை தீமைகளை தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ் வேதத்தை தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன். இது உலகத்தார் யாவ ரையுமே அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. 25:1

22 ( நபியே, குர்ஆன்ஷரீப் ) நிச்சயமாக இது உலகங்களின் இறைவனால் தான் அருளப்பட்டது. 26 : 196

23 இறைவனின் கட்டளைப் பிரகாரம் றூஹுல் அமீன் (என்னும் ஜிப்ரீல்) இதனை உமது இருதயத்தில் இறக்கி வைத்தார்.

24 நீர் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக தெளி வான அரபீ மொழியில் இறக்கி வைத்தான். 26 : 193 - 195

25 (இதைப் பற்றி முன்னறிக்கை) நிச்சயமாக முன்னுள்ள வேதங்களிலும் இருக்கிறது. 26 : 196

26 (நபியே) நீர் இதற்கு முன்னர் எந்த வேதத்தை யும் ஓதியவரல்ல. உம்முடைய வலக்கையால் நீர் அதனை எழுதிப் பழகியவருமல்ல. அவ்வாறு இருந்து மிருக்குமாயின் இப் பொய்யர்கள் இதனை நீர் தாம தமாகவே கற்பனை செய்து கொண்டீரேயன்றி இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனால் அருளப்பட்டதல்ல என்று சந்தேகம் கொள் ளலாம். 29 : 48

27 நிச்சயமாக மனிதர்களுக்கு இந்தக் குர்ஆனில் சகல உதாரணங்களையும் நாம் கூறியிருக்கிறோம். அவர் கள் நல்லுணர்ச்சி பெறுவார்களாக. அன்றி (அல் லாஹ்வுக்கு) அவர்கள் பயந்து கொள்ளும் பொருட்டு எத்தகைய கோணலும் அற்ற இந்தக் குர்ஆனை (தெளிவான) அரபு மொழியில் இறக்கி வைத்தோம். 46 : 12

28 இதற்கு முன்னர் மூஸாவுடைய வேதம் (தவ்றாத்) ஜனங்களுக்கு வழிகாட்டியாகவும், அருளாகவும் இருந் தது. இதுவோ (அதனை) உண்மைப்படுத்தும் வேத மாகத் (தெளிவான) அரபி மொழியில் இருக்கிறது. (அன்றி) அக்கிரமக்காரர்களுக்கு அச்சமூட்டி எச் சரிக்கை செய்து கொண்டுமிருக்கின்றது. நன்மை செய்வோருக்கு நன்மாராயம் கூறிக் கொண்டு மிருக்கிறது. எவர்கள், எங்கள் இறைவன் அல்லாஹ் தான் என்று கூறி (அவன் அருள் புரிந்த இவ் வேதத்தை விசுவாசித்து அதில்) உறுதியாகவும் இருக் கிறார்களோ அவர்களுக்கு, நிச்சயமாக யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார் கள். 46 : 13

29 அவர் தனது இஷ்டப்படி (எதனையும்) கூறுவதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதே யன்றி வேறில்லை. 53 : 3 , 4

30 ஜிப்ரீல் என்னும் பராக்கிரமசாலியே இதனை அவ ருக்கு கற்றுக் கொடுத்தார். அவர் மிக்க ஆத்மா சக்தியுடையவர். (தன் இயற்கை உயரத்தில் நமது நபியின் முன்) அவர் தோன்றினார். அவர் உயர்ந்த வானத்தில் கடைக்கோடியிலிருந்து (இறங்கி) வளைந்த வில்லின் இரு முனைகளைப் போல் அல்லது அதைவிட சமீபமாக அவரை நெருங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 அவருக்கு அறிவித்ததையெல்லாம் அவர் அவனுடைய (நபியாகிய) அடியாருக்கு வஹி மூலம் அறிவித்தார். 53 : 5-9

32 ''வலக்கத் யஸ்ஸர் குர்ஆன் லித்திக்ரி பஹல் மிம் முத்திகிர்''
மனிதர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்காக இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கினோம். இதனைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டா?

33 (நபியே) யாதொரு மலையின் மீது நாம் இந்தக் குர்ஆனை இறக்கி வைத்தால் அது அல்லாஹ்வின் பயத்தால் நடுங்கி வெடித்துப் பிளந்து போவதை நீர் கண்டிருப்பீர். மனிதர்கள் உற்று உணர்ந்து பார்க்கும் பொருட்டு இவ்வுதாரணங்களை நாம் கூறுகின்றோம். 59 : 21

34 (நீர் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கும்) இவ்வேதம் (பொதுவாக) உலகத்தார் யாவருக்குமே ஒரு நல்லுபதேசமேயன்றி வேறில்லை. 68 : 52

35 (திருக்குர்ஆனாகிய) இது மெய்யாகவே ஒரு நல்லுபதேசமாகும். எவன் நேரான வழியில் செல்ல விரும்புகின்றானோ அவன் இதனைச் செவியுற்று ஞாபகத்தில் வைத்துக் கொள்வான். 88 : 12

36 மிக்க கண்ணியமான நல்லோராகிய எழுதுவோர்களின் கைகளினால் (லவ்ஹுல் மஃபூல் என்னும்) மிக்க கண்ணியமான ஏடுகளில் வரையப்பட்ட பரிசுத்தமான (இவ்வேதமானது) மிக்க மேலான இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. 80 : 14-16

37. நிச்சயமாக நாம் தாம் இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம். ஆகவே (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாதவாறு) நிச்சயமாக நாமே அதனை இரட்சித்துக் கொள்வோம். 15 : 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38 குர்ஆன் மஜீதின் மூலம் அல்லாஹ் விசுவாசிக ளுக்கு ஆறுதலையும் அருளையும் இறக்கினான்.

39 மனிதர்களே, உங்கள் இறைவனிடமிருந்து போது மான அத்தாட்சி நிச்சயமாக உங்களிடம் வந்து விட்டது. தெளிவான பேரொளியை நாம் உங்களுக்கு அருள் செய்திருக்கிறோம். 3 : 174

40 ''சமுத்திரத்திலுள்ள நீர் யாவும் மையாக இருந்து அல்லாஹ்வின் வாக்கியங்களை எழுத ஆரம்பித்தால் இறைவனின் வாக்கியங்கள் முடிவதற்கு முன்னதா கவே இந்தச் சமுத்திரம் யாவும் செலவாகிவிடும். அதைப் போல் இன்னொரு பங்கும் சேர்த்துக் கொண்டும் கூட

41 பூமியிலுள்ள மரங்கள் (செடிகள்) யாவும் எழுது கோல்களாகவும் சமுத்திர ஜலம் மையாகவும் இருந்து அது தீர்ந்து பின்னும் ஏழு சமுத்திரங்கள் மையாக இருந்து எழுத உதவிய போதிலும் அல்லாஹ்வின் வசனங்கள் நிச்சயமாக எழுதி முடிவுபெறா...... 31:27

42 நபியே நீர் கூறும், மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து இதைப் போன்ற ஒரு குர் ஆனை கொண்டு வர சிலர் சிலருக்கு உதவியாக இருந்த போதிலும் இதைப் போல் கொண்டு வர அவர்களால் முடியாது. 17 : 88

43 இந்தக் குர்ஆனில் சகல உதாரணங்களையும் மனி தர்களுக்கு நாம் (திரும்பத்திரும்ப) விவரித்து கூறி யிருக்கிறோம். எனினும் மனிதர்களில் பெரும்பா லோர் இதனை நிராகரிக்காதிருக்கவில்லை. 17:88

44 (நபியே முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும் நாம் உம்மீது அருளினோம். இது தனக்கு முன்னுள்ள மற்ற வேதங்களையும் உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கி வைக்கிறது. அன்றி அவைகளைப் பாதுகாப்பாகவும் இருக்கிறது. அல்லாஹ் உமக்கு அருளிய இதனைக் கொண்டே அவர்களுக்கிடையே தீர்ப்பு அளியும்............... 5 : 48

45 மனிதர்களே, திருக்குர்ஆனை ஓதப் பெற்றால் வாய் பொத்தி செவி தாழ்த்தி அதனைக் கேளுங்கள். (அதனால்) நீங்கள் இறைவனின் அருளை அடையலாம். 7 : 204

46 இது உலகங்கள் யாவுக்கும், உங்களில் எவன் நேரான வழியில் செல்ல விரும்புகின்றானோ அவனுக்கும் ஒரு நல்லுபதேசமேயன்றி வேறில்லை. 81 : 27 , 28

47 இதற்கு முன்னும் சரி பின்னும சரி (திருக்குர்ஆனாகிய) இதனை பொய் அணுகவே அணுக முடியாது. மிக்க புகழுக்குரியவனும் ஞானமுடையவனுமால் இது இறக்கப்பட்டது. 41 : 42

48 நம்முடைய தூதருக்கு நாம் கவிதை இயற்றக் கற்றுக் கொடுக்கவில்லை. அது அவருக்குத் தகுமானதுமல்ல. இது நல்லுபதேசமும் (நன்மை தீமைகளை) தெளிவாக்கக் கூடிய குர்ஆனுமேயன்றி வேறன்று. 36 : 69

49 நிச்சயமாக இது மிக்க கண்ணியமுள்ள குர்ஆன் (இது லவ்ஹுல் மஃபூல் என்னும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் (எழுதப்பட்டுள்ளது) பரிசுத்தவான்களைத் தவிர (மற்றெவரும்) இதனைத் தொடமாட்டார்கள். எல்லா உலகங்களின் இறைவனால் இது எழுதப்பட்டதாகும். 56:77 - 80

50 இது நன்மை செய்வோருக்கு ஒரு நேர்வழிகாட்டியாகவும், ஓர் அருளாகவும் இருக்கின்றது. 31 : 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51 நபியே நாம் உம்மீது ஓதிய இவை (இறைவனுடைய) வசனங்களாகவும், ஞானம் (நிறைந்த) உபதேசங் களாகவும் இருக்கின்றன. 3 : 58

52 இது வேத நூல், இதில் சந்தேகமே இல்லை. பய பக்தியுடையவர்களுக்கு நேரான வழியைக் காட்டும்'
''ஹுதல்லில் - முத்தகீன் 2 : 2

53 (நல்லுபதேசங்களின்) நினைவுறுத்தல் நிறைந்த இக் குர்ஆனின் மீது சத்தியமாக (இது நம்மால் தான் அருளப் பெற்றது.) 38 : 2

54 நபியே, உம்மீது அருளப் பெற்ற இவ்வேதம் உல கத்தாரின் இறைவனிடமிருந்தே வந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதனை அவர் கற் பனை செய்து கொண்டார், என்று கூறுகின்றனரா? அவ்வாறன்று இஃது உமதிறைவன் உமக்கு அருளிய உண்மையான வேதமாகும். 32 : 1

55 அல்லாஹ் மிக்க அழகான செய்திகளையே இந்த வேதத்தில் இறங்கியிருக்கின்றான். ஒன்றை மற்றொன்று ஒத்ததாக பின்னும் பின்னும் கூறப்பட்டுள்ளது. எவர் கள் தங்கள் இறைவனுக்குப் பயப்படுகிறார்களோ அவர்களுடைய உரோமம் சிலிர்த்து விடுகிறது. பின் னர் அவர்களுடைய தொலிகளும் இருதயங்களும் அல்லாஹ்வுடைய எண்ணத்திலே இளகுகின்றன, இதுவே அல்லாஹ்வின் நேரான வழியாகும். 39:23

56 அன்றி அல்லாஹ்வின் வசனங்களைப் பொய்யாக்கி யவர்களுடன் நீர் சேர்ந்து விட வேண்டாம். அவ் வாறாயின் நஷ்டமடைந்தோரில் நீரும் ஒருவராகி விடுவீர். 10 ; 95

57 மனிதர்கள் நல்லுணர்ச்சி பெறும் பொருட்டே இந் தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றோம். (ஆகவே) இதனைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறக்கூடியவர் எவரும் உண்டா? 54:17

58 நிச்சயமாக குர்ஆன் மூமின்களுக்கு வழிகாட்டியாகவும் அருள் நிறைபேழையுமாக இருக்கிறது.

59 அல்குர்ஆன் அவர்கள் கூறுவது போன்று (கவிதையும்) அல்ல செய்யுளும் அல்ல; ஞாபகமூட்டும் துல்லியமானது அல்குர்ஆன். நிச்சயமாக இவ்வேதத்தில் இறைவனுடைய அருளும் விசுவாசம் கொண்ட ஜனங்களுக்கு ஒரு நினைவூட்டலும் இருக்கின்றன. 29:51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆனின் சிறப்பியல்புகள்

லவ்ஹுல் மஃபூல் - என்னும் ஒளிவுப்பீடத்தில் பதியப் பட்டிருந்த அல்குர்ஆனை அல்லாஹ் ஜிப்ரயீல் மூலம் முகம்மத் (ஸல்) அவர்கட்கு அருளினான்.

புனித குர்ஆனை ஓதிவருபவன் நபித்துவ ஞானத்தை தனது நெஞ்சில் பெற்றுக் கொண்டவனாவான்.
(ஆதாரம் - குர்ஆனின் சிறப்பு)

குர்ஆனை ஓதும் மூஃமின்களுக்கு உதாரணம் :-
01 பேரீத்தம் பழம் போன்றது - மணமில்லை ருசியுண்டு
02 குர்ஆனை ஓதும் முனாபிக்கிக்கு உதாரணம் - ஒரு மலரைப்போன்றது. மணம்உண்டு; ருசி கசப்பானது.

கியாமத்து நாளில் குர்ஆனின் அந்தஸ்து என்ன?
பரிசுத்த திருமறை அர்ஷின் கீழ் இருந்து நல்லடியார்களுக்கு சிபார்சு செய்யும்.

குர்ஆனை தம் புதல்வர்கட்கு கற்பிக்கும் தந்தை அடையும் பயன்:
தந்தையின் முன் பின் பாவங்கள் மன்னிக்கப்படும்.

''தஹஜ்ஜத்'' தொழுகையில் குர்ஆனை வசனிப்போர்: வாய்கட்டிய கஸ்தூரிப்பை போன்றவர்.

பாழடைந்த வீடு:
குர்ஆனின் எந்தப் பகுதியையும் மனனம் செய்யாத உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனை அழகுற ஓதும் ஒருவர் அடையும் நன்மைகள்:

பார்த்து ஓதுபவர்கட்கு 2000 நன்மைகள்

பாராமல் ஓதுபவர்கட்கு 1000 நன்மைகள்

பார்த்து ஓதுபவர்கட்கு அவர்களின் கண்பார்வை துலக்கமடையும்.

சுபஹூத் தொழுகையின் பின்னர் ஓதுபவர்கட்கு உலகளவு நன்மை கிடைக்கும்.

இதயத்தின் கறள் அகற்றுவது:

அல்குர்ஆனை அதிகமதிகம் ஓதல். விசுவாசிகட்கு நேர்வழிகாட்டியாகவும் ஓர் அருளாகவும் இருக்கிறது.

மறுமையின் சேமிப்பு:

குர்ஆனை ஒழுங்காக ஓதுவது - இது உலகின் ஒளியாகவும் இருக்கிறது.

அல்லாஹ்வின் குடும்பத்தவர் யார்?

ஹாபிஸ்கள் - அவர்கள் அல்லாஹ்வுக்கு உரியவர்கள் - அவனுக்கு சொந்தமானவர்கள்.

அல்லாஹ் விருப்புடன் கேட்பது எது?

தன்மறையை இனிய குரலில் ஓதுவதை... நபி(ஸல்) அல்லாஹ்வுடைய பயம் அவர்கள் வதனத்தில் விளங்கும்.

'ஷுஹபுல் ஈமான்' குர்ஆனைப் பற்றி என்ன கூறுகிறது?

குர்ஆனை தலையணையாக மாற்றிக் கொள்ளாதீர்கள்;
முறையாக இரவிலும் பகலிலும் ஓதுங்கள்;
ஓதி ஓதி ஆராய்ச்சி செய்யுங்கள்;
இம்மை மறுமையில் வெற்றியடைவீர்கள்;
மறுமையில் மாபெரும் நன்மையுண்டு.

அருள்மறையை ஓதக் கேட்பதும் - ஓதுவதும் கடமையா?

ஆம், ஓதக் கேட்பது பர்ளு; ஓதுவது பர்ளைவிட உயர்வானது.

குர்ஆன் ஸூராக்களை வகுத்துக் காட்டுவது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 அஸ்ஸப் உதூன் - நீண்ட ஸூராக்கள் 7
2 மயீன் - நூற்றுக்கதிகமான வசனங்களை கொண்டது
3 மஸானி - திரும்பத்திரும்ப ஓதும் ஸூராக்கள் 20
4 முஃபஸ்ஸஹ் - சிறிய சிறிய ஸூராக்கள் 76

குர்ஆனை ஓதும் ஒலி முறைகள் எவை?

1 சப்தமிட்டு ஓதுபவர் - பகிரங்க ஸகாத் செய்பவர்
2 இரகசியமாக ஓதுபவர் - இரகசியமாக ஸகாத் செய்பவர் போன்றாவார்

அருள் மறையை ஓதுவதற்கு நாட் கணக்கு உண்டா?

ஆம், 40 நாட்களில் ஓதிமுடித்தால் அவர் காலதாமதம் செய்தவராவார்.

30 நாட்களில் ஓதி முடித்தால் அவர் காலத்தைப் பேணிக் கொண்டார்.

7 நாட்களில் ஓதி முடித்தால் அவர் மிகச் சிறந்த அமலைச் செய்தார்.

மறுமையின் சிபார்சு, உயர் அந்தஸ்து எதற்கு உண்டு?

நபிக்குமல்ல; மலக்குக்குமல்ல; அல்குர்ஆனுக்கேயுரியது

''நபில்'' தொழுகையைவிட மேலானது எது?

அல்குர்ஆனின் வசனத்தைக் காலையில் கற்றுக் கொள்வது, 100 ரக்காத்து நபில் தொழுவதைவிட மேலானது

இரவில் குர்ஆன் ஓதுவதன் நன்மை:

பத்து ஆயத்துக்களை ஓதுபவர் மறதியாளர் அல்லர்

குழப்பங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள அல்குர்ஆனை அதிகம் அதிகம் ஓதுங்கள்.

''நன்மை தீமையைப் பிரித்தறிவிக்கும் புர்க்கானை தன் அடியார் (நபி முஹம்மத்) மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன். இது உலகத்தவர் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது'' 25 : 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனில் இலக்கம் 19ன் ஆளுமைகள்!

பிஸ்மில்: 19 எழுத்துக்கள்
தொழுகையின் பர்ளுகள்: 19
ஸூராக்களின் எண்ணிக்கை: 114
அல்லாஹ்வின் நாமம்: 2697
ஸூரா காபில் 'காஃப்': 57
ஸூரா யாஸினில் 'யா': 285

திர்மிதி ஹதீஸ் கிரந்தம் கூறும் சிறப்புரை:

1 குர்ஆன் வசனங்களே மிக்க மேலானது.
2 இல்லங்களை தொழுவதைக் கொண்டும், குர்ஆன் ஓதுவதைக் கொண்டும் அலங்கரியுங்கள்.
3 அல்குர்ஆனைத் தவிர சிறந்த சீமான்தனம் இல்லை.
4 பேச்சுக்களிற் சிறந்தது அல்லாஹ்வின் கலாம்.
5 குர்ஆன் பயான் மஸ்ஜிதுகளில் ஸகீனத்தைத் தரும் (தித்திக்கும் திருமறை)

13718



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்பதின் ஒழுங்கு

சங்கைக்குரிய திருக்குர்ஆன் ரப்புல் ஆலமீனாகிய அல்லாஹுத்தஆலாவின் திருவசனம். அது றூஹுல் அமீன் (நம்பிக்கைக்குரிய ஆவி) எனப்படும் ஜிப்ரீல் (அலை) அவர்களின் மூலமாக இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கட்கு அருளப்பட்டது. சொன்னயம்மிக்க உயர் அந்தஸ்தில் நேர்வழியாக, ஒளியாக, அறிவுப்பேழையாக, எச்சரிக்கையாக, நற்செய்தித்தூதாக, அறிவுக்களஞ்சியமாக, ஆத்மீக ஞானமாக, உலக வாழ்வின் வழிகாட்டியாக, எல்லாவற்றிற்கும் மேலாக தன்னிகரில்லாத அற்புதமாகக் காட்சியளிக்கிறது. அதனை ஓத ஓத தெவிட்டாத தேனின்பம் சுரந்து கொண்டேயிருக்கும். அல்குர்ஆனை ஓதி ஆராயும்போது அற்புதமான இரகசியங்கள், புதுமையான அறிவுகள், ஏகத்துவத்தை விளக்கும் ஆதாரங்கள், ஆத்மீக வாழ்வினால் ஏற்படும் ஈருலக பேரின்பங்கள் வெளியாகிக் கொண்டேயிருக்கும்.

## அல்குர்ஆன் ஓதுவதின் மேன்மையைக் குறிக்கும் நபிமொழிகள்:

1. எல்லா வாக்கியங்களை விடவும் அல்லாஹ்வின் கலாம் மிக உயர்ந்தது. - திர்மிதி
2. உங்களுடைய இல்லங்களை தொழுகையாலும், குர்ஆன் ஓதுவதாலும் அலங்காரம் செய்யுங்கள்- அனஸ் ரலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அல்லாஹுத்தஆலாவின் அரும் விருந்து குர்ஆன்.
4. அல்குர்ஆனைத் தவிர வேறு சீமான் தனம் இல்லை.
5. நிச்சயமாக இந்தக் குர்ஆனாகிறது உறுதியான ஒரு கயிறு ஆகும். இதனுடைய ஒரு முனை அல்லாஹ்வின் வசம் உள்ளது. மற்ற மூனை உங்கள் கரத்தில் உள்ளது. பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். வழி தவறி விட மாட்டீர்கள்.
6. குர்ஆன் ஓதுபவர் மீது பொறாமை கொள்ளலாகாது
7. என்னுடைய உம்மத்தினரின் வணக்க்ங்களில் மிக்க மேலானது குர்ஆன் ஓதுவதாகும்.
8. குர்ஆன் ஒதுவதும், மரணத்தை நினைப்பதும் கல்பின் கறனை நீக்கி, ஒளிவுறச் செய்யும்.
9. அருள்மறையை ஓதுவது கண்ணியமாகும். அதன் மூலம் மனிதர்களை அல்லாஹ் கண்ணியப்படுத்துகிறான்.

## அல்குர்ஆன் ஓதுவதைக் கேட்கும் முறை:-

நபி (ஸல்) அவர்கள், ஜிப்ரீல் (அலை) ஓதியது போன்றே அல்குர்ஆனை ஓதிக் காட்டினார்கள். நபி(ஸல்) ஓதினால் ஒவ்வொரு சொற்களாக நிறுத்தி ஓதுவார்கள். ''நபியே நிறுத்தி நிறுத்தித் தெளிவாக ஓதுவீராக'' (அல்குர்ஆன்) ''ஸ்திரமான முறையில் இதனை நீர் ஓதிக்காட்டும். நாம் பிரிவு பிரிவாக ஆயத்துகளாக - ஸூராக்களாக அல்குர்ஆனை பிரித்து அருளியுள்ளோம்.'' (அல்குர் ஆன்) நபி (ஸல்) அவர்களின் கிறாஅத் நிறுத்தல், நீட்டல் உடையதாகும். நபி (ஸல்) அவர்கள், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) ஓதக் கேட்பார்கள்; கண்ணீர் பெருகிக் கொண்டேயிருக்கும். ஸஹாபாப் பெருமக்கள் றஸூல் (ஸல்) அவர்கள் ஓதுவதைப் போன்றே ஓதுவார்கள்.

ஒருவர் அல்குர்ஆனை ஓத அதனைக் காதால்கேட்டு இதயத்தில் ராகம் செய்வதும் மிக்க பேரின்பமாகும். காரீகளின் கிறாஅத்தை கவனத்துடன் கேட்பது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஜ்வீதின் அவசியம்:

வாயில் ஒவ்வொரு எழுத்துக்களையும் உரிய இடத்தில் உச்சரிப்பதுதான் தஜ்வீத். மெல்லினத்தையும், வல்லினத்தையும் கடைப்பிடிப்பது. கடப்பின்றி பரிபூரண உச்சரிப்பில் வெளியாக்குவது.

## அழகிய தொனியில் ஓதுவது:

நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி ஸஹாபாக்கள், தாபியீன்கள், இமாம்கள் அனைவருமே திருக்குர்ஆனை இராகமாக ஓதுவதை அங்கீகரித்துள்ளனர். அபூமூஸா அவர்கள் அழகிய தொனியில் குர்ஆன் ஓதுவதை நபி ஸல் கேட்டு இரசித்துள்ளார்கள். இனிமையான குரலில் குர்ஆன் ஓதுவது அமரர்களையும் இன்பமடையச் செய்யும். உஸைதுப்னு ஹுலைர் (ரலி) அவர்கள் குர்ஆன் ஓதும் வேளை அமரர்கள் வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது கிறாஅத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும். எகிப்திய நாட்டு 1480 ஆண்டு பழமை வாய்ந்த அல் அஸ்ஹர் சர்வகலாசாலையில் கிறாஅத் பயிற்சி இன்றும் நடைபெறுகின்றது. கிறாஅத் முறையில் குர்ஆன் ஓதுவதை இமாம் ஷாபி, இமாம் நபவீ, இமாம் கஸ்ஸாலி, இமாம் கிர்மானி, ஃபங்ரானி, மாவர்தீ, முதலானோர் மேலும் மேலும் விளக்கியுள்ளார்கள்.

குர்ஆனை - வீணை சங்கீதம் போன்று ஓதுவதும் மார்க்க விஷயங்களில் சிறந்தவரல்லாத ஒருவரை இமாமாக ஏற்பதும் 'பித்அத்' என்று நபி ஸல் அவர்கள் கூறியுள்ளாதாக இமாம் அஹ்மத் (ரலி) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

அல்குர்ஆனை இராகமாக ஓதுவதை உமறிப்னு கத்தாப், இப்னு அப்பாஸ், இப்னு மஸ்ஊத் அபூமூஸா, அதாஉ, இப்னுல் முபாரக், நல்ருப்னு ஷுமைல், இமாம் அபூஹனிபா மற்றும் மூன்று மத்கபுக்குரிய இமாம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரித்துள்ளனர். குர்ஆனை இராகமாக அலங்காரத்துடன் ஓதுவதை விரும்பாத சில மார்க்க மேதைகளும் இருந்துள்ளனர்.

## ஓதுபவரின் ஒழுங்கு முறை

கிப்லாவை முன்னோக்கி உட்காருவது, தலையைத் தாழ்த்திய நிலையில் கண்ணியத்துடன் அமைதியுடன் பயபக்தி உள்ளத்தில் நிறைந்த நிலையில் ஒலுவுடன் பரிசுத்தமான இடத்தில் அமர்ந்து ஓதுவது. ''குர்ஆன் ஓதப்பட்டால் காது தாழ்த்திக் கேளுங்கள் வாய் மூடி இருங்கள், நீங்கள் அருள் புரியப்படுவீர்கள்'' என்று அல்குர்ஆன் வசனம் கேட்பதின் சிறப்பை வலியுறுத்துகின்றது.

அளவு கடந்த வேகமாக ஓதுதல் மக்ரூஹ் என்பது இமாம்களின் ஏகோபித்த தீர்ப்பு. மனிதர்களுடைய பேச்சு, செயல்களைக் கொண்டு கிறாஅத்தை முறிப்பதும் மக்ரூஹ். தொடரில்லாமல் விட்டு விட்டு அங்கொன்று இங்கொன்றாக குர்ஆன் ஓதுவது தடைசெய்யப்பட்டுள்ளது. நீண்ட சூறாக்களில் ஓதுவது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ''திருக்குர்ஆன் உங்களுக்கு நபி ஸல் கற்றுத் தந்தது போல அதை ஓதுங்கள்'' என்பதை நாம் மறந்து விடக்கூடாது. சூறாக்களை, ஆயத்துக்களை ஒழுங்கு முறையாகவே ஓத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனின் உருவமைப்பு, உட்பிரிவு

| | | |
|---|---|---|
| ஹுருபுகள் எழுத்துக்கள் | : | 326671 |
| கலிமாத் : சொற்கள் | : | 76430 |
| ஸூரா : அத்தியாயம் | : | 114 |
| ஜூஸ்உ பெரும்பிரிவு | : | 30 |
| மன்ஸில்கள் | : | 07 |

அத்தியாயங்கள் : மக்கீ சூராக்கள் 86
: மதனீ சூராக்கள் 28

## ஆயத்துக்களின் பிரிவுகள் :

| | |
|---|---|
| வரலாறு கூறும் வசனங்கள் | 1000 |
| வாக்குறுதியளிக்கும் வசனங்கள் | 1000 |
| அச்சுறுத்தி எச்சரிக்கும் வசனங்கள் | 1000 |
| நன்மையை ஏவும் வசனங்கள் | 1000 |
| தீமைகளை விலக்கும் வசனங்கள் | 1000 |
| உவமை கூறும் வசனங்கள் | 1000 |
| ஆகுமானவற்றை விளக்கும் வசனங்கள் | 250 |
| தடுக்கப்பட்டதை விளக்கும் வசனங்கள் | 256 |
| இறை துதி கொண்ட வசனங்கள் | 100 |

ஆதாரம் ''தர்ஜூமதுல் குர்ஆன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல் குர்ஆன் ஆயத்துக்கள் :

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சட்ட பூர்வமானது | : | 2000 | ஆயத்துக்கள் |
| 02. | சட்ட விரோதமானது | : | 1000 | ஆயத்துக்கள் |
| 03. | சட்டத் தெளிவானது | : | 1000 | ஆயத்துக்கள் |
| 04. | உருவகமானது | : | 600 | ஆயத்துக்கள் |
| 05. | உவமான ரீதியானது | : | 1000 | ஆயத்துக்கள் |

ஆதாரம்: நளீமிய்யா முஸ்லீம் நோக்கு டிசம்பர் 1984

## அல் குர்ஆனின் அழகிய திருநாமங்கள் ;

தர்ஜுமதுல் குர்ஆனில் 35 அழகிய திருநாமங்கள் தரப் பட்டுள்ளன. பழக்கத்தில் உள்ள பத்து நாமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அல்கிதாப் | வேத நூல் | அஷ்ஷிபா | சஞ்சீவி |
| அல்பயான் | தெளிவுரை | அல்ஹிகிமத் | ஞானப் பேழை |
| அல்புர்கான் | பிரித்தறிவிப்பது | அல்மஜீத் | கண்ணியமிக்கது |
| அல்ஹுதா | நேர்வழி | ஹப்லில்லாஹ் | அல்லாவின்கயிறு |
| அர்ரஹ்மத் | அருட்கொடை | அர் - ரூஹ் | ஜீவன் |

## குர்ஆனின் ஆயத்துக்கள் :

| | | | |
|---|---|---|---|
| ஏவல் வசனங்கள் | 1000 | ஹலால் பற்றியது | 500 |
| விலக்கல் பற்றியது | 1000 | ஹறாம் பற்றியது | 500 |
| உவமான வசனங்கள் | 1000 | முன் நிகழ்ந்தது | 500 |
| வாக்குறுதி வசனங்கள் | 1000 | தஸ்பீஹ் வசனங்கள் | 100 |
| | | மாற்றப்பட்டது | 66 |

## கிராஅத் 7 வகை - உருவாக்கியர்கள் ;

| | | | |
|---|---|---|---|
| 01. | இப்னு அமீர்ஷாமி | திமிஷ்க் | டமஸ்கஸ் |
| 02, | இப்னு கதீர் | மக்கா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. ஹம்ஸ கூஃபி ஹூஸ்வான் கூபா
04. ஆஸிம் கூஃபி கூஃபா
05. அபூ உமர் மக்கா
06. நாஃபிஃ மதீனா
07. கிஸாபி கூபா கூபா

இராஅத்தின் உயர் படித்தரம் என்ன?
ஓதுவதைக் கேட்டு உள்ளம் பரவசமடையும், கேட்போரின் மனோ நிலை மாண்புடையதாக மாறும்.

ஆயத் என்பதன் விளக்கம் யாது?
ஆயத் அல்குர்ஆனின் வசனங்களையே குறிப்பிடுவன. அடையாளம், பேரற்புதம், படிப்பினை, ஆச்சரியம், அத்தாட்சி, ஆதாரம், அதிசயம்......என்பன கருத்து

சூரத் - விளக்கம் தருக?
அத்தியாயம் என்பது பொதுவான கருத்து. குர்ஆனின் அத்தியாயங்களைக் குறிப்பிடுவது. அரண்-மதில்-வேலி. ஒரு பகுதி எனவும் பொருள் உண்டு. 114 சூராக்களுடன் ஒவ்வொரு பெயருடன் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியாகும்.

முஸ்ஹப் - விளக்கம் தருக.
அத்தியாயங்கள் ஒழுங்குபடுத்தி ரசூலுல்லாஹ் அவர்கள் சரியென ஏற்ற அல்குர்ஆன். ஜிப்ரீல் (அலை) அவர்கள் இரு தடவை அல்லாஹ்வின் கலாமை ஓதி சரி காணப்பட்டது. முஸ்ஹப்பாகும்.

அல் மன்சூக் : விபரம்
மாற்றப்பட்டது என்பது பொருள். நாஸிக், மன்சூக் இரண்டும் அல்லாஹ்வினால் மட்டும் அல்குர்ஆனில் செய்யப்பட்டது.

குர்ஆன் சம்பந்தப்பட்ட சில சட்டங்களைத் தருக
1. தொழுகை சூராக்களையாவது மனனம் செய்தல்.
2. இயன்றளவு இவைகளின் கருத்தறிதல்.
3. குர்ஆனை மனனம் செய்தல் பர்ளுகிபாயாவாகும்.
4. ஹாபிஸ் ஒருவர் இல்லாத ஊர் வெறுப்புக்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தஜ்வீத் சட்டங்களை கற்பிப்பது, அறிவது, செயல் படுத்துவது முக்கியம்.
6. மஸ்ஜிதில் இருந்து குர்ஆனை (இரண்டு ஆயத்துக் களையாவது) ஓதுவது மிகவும் மேலானது.

அல்குர்ஆனின் இரு வகை விளக்கச் சட்டங்கள் கூறுக?

1. தப்ஸீர் விளக்கவுரை 2. தஃவீல் வியாக்கியானம்
''அஹ்ஸனத் தப்ஸீரா 25 : 33 அழகான வியாக்கியானம்.

ஆரம்ப கால முபஸ்ஸிரீன்கள்

ஹஸரத் அபூபக்கர் ஸித்தீக், ஹஸரத் உமர், உதுமான், அலி (ரலி), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், உபைய்யிப்னு கஃபு, ஜைதிப்னு தாபீத், அபூமூஸா அல் அஷ்அரீ, அப்துல்லா பின் ஜுபைல்.

இடைக்கால முபஸ்ஸரீன்கள்

தாபியீன்கள்:- ஹஸ்ரத் முஜாஹித் (ரலி), அத்தாபின் அபீரபாஹ், இக்ரிமா (ரலி), ஸயீதிப்னு ஸுபைர் (ரலி), தாவூஸ்(ரலி) ஹஸனுல் பஸரீ (ரலி), கதாதா, ஸைது பின் அஸ்லம், ழஹ்ஹாக் (ரலி)

ஹிஜ்ரி 3ஆம் நூற்றாண்டில் சிறந்த தப்ஸீர் எது?

உம்மு தப்ஸீர் எனச் சிறப்புப் பெயர் பெற்ற முகம்மத் இப்னு அத்தபரியின் ''தப்ஸீருத் தபரி'' என்பதே.

தப்ஸீர்கலை வளர்ச்சியுற்ற காலம் எது?

தபஅத்தாபியீன்கள் காலம்.

ஹிஜ்ரி 4ஆம் நூற்றாண்டில் தோன்றிய தப்ஸீர்கள் எவை?

| | |
|---|---|
| அல்பயானுல் ஜாமிஉ | இமாம் தூஸி |
| அல்கஷ்ஷாப் | இமாம் ஷமக்ஷரி |
| மஜ்மஉல் பயான் | இமாம் தப்ரயீ |
| மபாதிஹுல் கைபு | இமாம் ராஸீ |
| றூஹுல் மஆனி | இமாம் ஆலூஸ் |
| தப்ஸீருல் மனார் | முகம்மத் அப்துஹு |
| தப்ஸீருல் ஜௌஹரி | தந்தாவி |
| உஸுலுத்தப்ஸீர் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை :

1. பெருந்தொடக்கு - மாதவிடாய், பிள்ளைப்பேறுத் தொடக்கு உள்ளவர்கள் குர்ஆனைத் தொடுவது ஹராம்.
2. சிறு தொடக்குள்ளவர்கள் குர்ஆனை சுமப்பது தடை செய்யப்பட்டுள்ளது. ஓதுவது தடை செய்யப்படவில்லை. சிறுதொடக்குள்ளவர்கள் அவசியமேற்படின் தொடலாம்.
3. கையில் நஜீஸ் உள்ளவர்களும் குர்ஆனைத் தொடுவதும் வாய் அசுத்தம் உள்ளவர்கள் ஓதுவதும் கூடாது.
4. தொழுபவர்களுக்கு இடையூறு ஏற்படும் வண்ணமும் வாங்கொலி கேட்கும்போதும் குர்ஆனை ஓதுவது தடைசெய்யப்பட்டுள்ளது.
5. குர்ஆனை மனனமாக ஓதுவதைவிட பார்த்து ஓதுதல் சிறப்பானது.
6. அச்சம், மனஓர்மை, சிந்தனை அதிகப்படுத்தும் நோக்குடன் மனனமாக ஓதுவதும் நல்லது.
7. மரணித்தவர்களுக்கு குர்ஆன் ஓதி துஆ செய்வதும், ஹதியாச் செய்வதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, மூன்று இமாம்களும் - ஷரஹ் மின்ஹாஜ் என்ற ஷாபி கித்தாபும் இணக்கம் கண்டு இதனை இமாம் சுயூத்தி தமது "இத்கா" என்ற நூலில் கூறியுள்ளார். இமாம் சல்கானி (றஹ்) அவர்களும் ஒப்புதல் பண்ணியுள்ளார்கள்.

தப்ஸீர் கலை :

தப்ஸீர் - விளக்கவுரை கலாநிதிகள் முபஸ்ஸரின்கள் என்று அழைக்கப்படுவர்.
முபஸ்ஸரின்களுக்கு இருக்க வேண்டிய கலைத் திறமைகள் 15ம் பின்வருமாறு:

01. நஹ்வு இலக்கணம், சொற்புணர்ச்சி, அகராதி ஞானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஸர்பு — சொல் இலக்கணம்
03. மஆனி — அணி இலக்கணம் (பொருள் இலக்கணம்)
04. இல்முல் பதிஉ — அருங்கலை - கிராஅத் - இஸ்லாமி சித்தாந்தக் கலை
05. இல்முல் அகாயித் — இஸ்லாமிய சட்டஞான மார்க்கச் சட்டக்கலை
06. உஸூலே பிக்ஹ் — இஸ்லாமிய சட்டஞான அடிப்படைக்கலை
07. இல்முல் பயான் — திருவசனங்கள் இறங்கிய காலங்கள் காரணிகள் பற்றிய காலம்
08. ஸபபேநுஸூல் — வசனமாற்றம் பற்றிய கலை
09. நாஸூக் மன்ஸூக் — மாற்றப்பட்ட குர்ஆன் வசனங்கம்
10. அருள் ஞானம் — 11. அகராதி ஞானம்
12. இறையருள் — 13. அற்புத விளக்கம்
14. சொற்புணர்ச்சி — 15. இலக்கியக்கலை

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரபிக் குர்ஆன் தப்ஸீர்களிற் சில

01. அன்வாருத் தன்ஸீல் — 02. அஸ்ராருத் தஹ்வீல்
03. தப்ஸீருல் ஜலாலைன் — 04. இப்னு கதீர்
05. தப்ர்ஸீ ஜலாலைன் — 06. ஷைகு தந்தாவி
07. ளிளாலில் குர்ஆன் — 08. பைசுல் கபீர்

## தமிழ் தப்ஸீர்கள் :

தப்சிருல் ஹமீத் - மௌலவி எஸ். எஸ். அப்துல்காதர் பாகவி - தென்இந்தியா
அன்வாருல் குர்ஆன் - மௌலவி அப்துல் றகுமான் பாகவி தென்இந்தியா
தப்ஸீருல் மஜீத் - பா. தாவூத்ஷா பீ. ஏ. பாகவி தென் இந்தியா

## தர்ஜுமதுல் குர்ஆன் :

REFERENCE

ஷைகு ஸஅதி - பார்ஸி மொழி - ஈரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாஹ் வலியுல்லாஹ் பஹ்லவி - பார்சி மொழி ஈரான்
ஷா அப்துல் காதர் - உர்து மொழி பாக்கிஸ்தான்
தர்ஜுமதுல் குர்ஆன் - தமிழ் மௌலவி ஏ. கே. அப்துல் ஹமீத் பாகவி தென் இந்தியா
திருக்குர்ஆன் - தமிழ் அல்ஹாஜ் பாட்சாஜான் சாகிபு தென்னிந்தியா
திருக்குர்ஆன் - சிங்களம் சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையம்

**ஆங்கிலம் :**

ஜோர்ஜ் சேல் - 1737 இங்கிலாந்து
ரோட் வெல் - 1876 இங்கிலாந்து
பாமர் - 1886 பிரஞ்சு
ஆல்பெல் - 1937 இங்கிலாந்து
மௌலவி முகம்மத் அலி - 1925 லாகூர்
முகம்மது பிக்தால் - 1930 அமெரிக்கா
அல்லாமா யூசுப் அலி - 1935 இந்தியா
பேராசிரியர் ஏ. ஜே. பார்பரி - 1958

**அல்குர்ஆன் கூறும் நபிமார்களின் வயது :**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஆதம் | (அலை) | 1000 | வருடம் |
| 02. | ஷீத் | (அலை) | 882 | வருடம் |
| 03. | இத்ரீஸ் | (அலை) | 356 | வருடம் |
| 04. | நூஹ் | (அலை) | 950 | வருடம் |
| 05. | ஹூத் | (அலை) | 256 | வருடம் |
| 06. | ஸாலிஹ் | (அலை) | 586 | வருடம் |
| 07. | இப்றாஹிம் | (அலை) | 195 | வருடம் |
| 08. | இஸ்மாயில் | (அலை) | 137 | வருடம் |
| 09, | இஸ்ஹாக் | (அலை) | 120 | வருடம் |
| 10. | யாகூப் | (அலை) | 129 | வருடம் |
| 11. | யூசுப் | (அலை) | 110 | வருடம் |
| 12. | மூசா | (அலை) | 125 | வருடம் |
| 13. | ஹாரூன் | (அலை) | 119 | வருடம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 14. | சுலைமான் | (அலை) | 150 வருடம் |
| 15. | தாவூத் | (அலை) | 202 வருடம் |
| 16. | சகரிய்யா | (அலை) | 207 வருடம் |
| 17. | ஐயூப் | (அலை) | 146 வருடம் |
| 18. | ஷுஐபு | (அலை) | 225 வருடம் |
| 19. | ஈஸா | (அலை) | 033 வருடம் |
| 20. | யஹ்யா | (அலை) | 095 வருடம் |
| 21. | முகம்மத் | (ஸல்) | 063 வருடம் |

ஆதாரம் : ''மலேசிய வானொலி''

## உதுமானிக குரான் :

கியுபிக் எழுத்து வடிவில் உள்ள ஒரேயொரு குர்ஆன். கி. பி. 656 ஹசரத் உதுமான் (ரலி)யின் கிலாபத் ஆட்சி இருந்த சமயம் ஒரு நாள் ஓதிக் கொண்டிருந்தார்கள். திடீரெனப் பாய்ந்த கொலைகாரனின் கத்திக்குத்துக்குப் பலியாகி ஷஹிதானார்கள்.

அதே வேளை அவர்களின் புனித இரத்தம் புனித மறையில் பாய்ந்தது. அந்த இரத்தக் கறை இன்றும் அப் புனித குர்ஆனில் காணப்படுகின்றது.

ருஷ்ய நாட்டின் தாஷ்கந் குடியரசில் உள்ள உஸ்பெக் கிஸ்தான் மக்கள் நூதனசாலையில் 1941 ஆம் ஆண்டு முதல் வைக்கப்பட்டுள்ளது.

1990 மார்ச்சு மாதத்தில் இத் திருமறையை மத்திய ஆசிய 4வது மாநாட்டில் ரஷ்ய நாட்டு தேசிய அரும் பொருளாக மீண்டும் கையளிக்கப்பட்டது. உதுமான் ரலி ஓதி வந்த இரத்தக் கறை படிந்த இப் புனித குர்ஆனை ரஷ்ய அரசு உதுமானிக் குரான் என்று பெயர் சூட்டியுள்ளது.

ஆதாரம் : சோவியத் உஸ்பெகிஸ்தான்
சஞ்சிகை இலக்கம் : 0206 - 2650



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலிப் வரிசையில் அல்குர்ஆன் சூராக்கள் :

| | | | |
|---|---|---|---|
| அலிப் | : | 96 | சூராக்கள் |
| பே | : | 1 | சூராக்கள் |
| தே | : | 1 | சூராக்கள் |
| ஹே | : | 2 | சூராக்கள் |
| சீன் | : | 1 | சூராக்கள் |
| ளாத் | : | 1 | சூராக்கள் |
| தே | : | 1 | சூராக்கள் |
| அயின் | : | 1 | சூராக்கள் |
| காஃப் | : | 2 | சூராக்கள் |
| லாம் | : | 1 | சூராக்கள் |
| மீம் | : | 2 | சூராக்கள் |
| நூன் | : | 2 | சூராக்கள் |
| யே | : | 3 | சூராக்கள் |
| | | ........ | ........ |
| | | 114 | சூராக்கள் |

தர்ஜுமதுல் குர்ஆன்

## தமிழ் மொழி கூறும் சிறப்புப் பெயர்கள் :

அல்லாஹ்வின் வேதம் — இறுதி வேதம்
திருத்தமில்லாத் திருமறை — வான் மறை
உலகப் பொது மறை — இறை மறை
மாற்றமில்லாத மாமறை — இதயவேதம்
வன்மைமிக்க நன்மறை — செஞ்சொற் கோவை
கற்பனை கலவாக் காவியம் — ஒப்பற்ற இலக்கியம்
வாக்ழ்கை விளக்க நூல் — வாழ்க்கை ஒளிவிளக்கு
என்றுமுள்ள ஓரே மறை — வெற்றித் திருமறை

திருத்தம் தேவையில்லாத் திருமறை
உலகெல்லாம் ஒலிக்கும் உயர்நாதம்
நெஞ்சத்தின் சஞ்சீவி (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைமறையின் ஆயத்துக்கள் :

| | | |
|---|---|---|
| 1. | ஆயிஷா நாயகியின் கணிப்பு | 6666 |
| 2. | ஷாம் வாசிகளின் கணிப்பு | 6250 |
| 3. | கூஃபாவாசிகளின் கணிப்பு | 6236 |
| 4. | இப்னு மஸ்ஊத் (ரலி) யின் கணிப்பு | 6218 |
| 5. | பஸ்ரா வாசிகளின் கணிப்பு | 6216 |
| 6. | ஜஃபரே மதனியின் கணிப்பு | 6214 |
| 7. | இராக் வாசிகளின் கணிப்பு | 6214 |
| 8. | மக்கா வாசிகளின் கணிப்பு | 6214 |

ஏற்றுக் கொள்ளப்பட்ட கணிப்பு யாருடையது?
அன்னை ஆயிஷா (ரலி) 6666 ஆயத்துக்கள்.

குர்ஆனை ஓதக் கேட்கும் நடை முறை என்ன?
மனிதர்களே, திருக்குர்ஆன் ஓதப் பெற்றால் வாய் மூடி செவி தாழ்த்தி அதனைக் கேளுங்கள். அதனால் நீங்கள் இறைவனின் அருளைப் பெறலாம். 7:204

''வறத்திலில் குர்ஆன தர்தீலா''
குர்ஆனை ஓதும்போது தெளிவாக் அழகிய முறையில் ஓதுவீராக.

## கவனிக்க வேண்டியன :

1. எழுத்துக்களின் சரியான உச்சரிப்பு
2. நிறுத்தல் குறிகளை அறிதல்.
3. சேர்த்தும் பிரித்தும் ஓதத் தெரிதல்.
4. உயிர்க்குறிகளை (பத்ஹு, கஸ்று ..........) நன்றாக வெளிப்படுத்தல்.
5. சத்தத்தை உயர்த்தியும், தாழ்த்தியும் ஓதல்.
6. சத்தத்தில் உருக்கம் தோன்றல்.
7. ஸத்து மத்து திட்டம் அழுத்தல்.
8. கிருபை வசனங்களுக்கு உள்ளானந்தமும், தண்டனை வசனங்களுக்கு உள்ளச்சமும் கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பலன் தரும் சிறப்பான சூராக்கள்

| | |
|---|---|
| சூரா கஹ்ப் | - ஜும்ஆ நாளில் ஓதுவது (கியாமத்தின் ஒளி கிடைக்கும்) |
| சூரா துகான் | - ஜும்ஆ இரவில் ஓதுவது (மலக்குகளின் பாவமன்னிப்பு துஆ கிட்டும்) |
| சூரா யாஸீன் | - கல்பில் குர்ஆன். ஸுபஹு தொழுகையின் பின்னர் ஓதின் ஜீவனகஷ்டம் நீங்கும்' 10 தடவை குர்ஆன் ஓதும் தவாபு கிடைக்கும். |
| சூரா அர்ரஹ்மான் | - இறைவனுக்கு நன்றி தெரிவித்தும் பலன் கிட்டும். |
| சூரா வாக்கியா | - தினசரி மஃரிப் தொழுகையின் பின் ஓதுவது - வறுமை பீடிக்காது உணவு விஸ்தீரணம் கிடைக்கும். |
| சூரா முல்க் | - இஷாத் தொழுகையின் பின்னர் ஓதுவது. கப்றுடைய அதாபு நீங்கும். |
| சூரா நூஹ் | - இரவில் ஓதுவது. பகைவரின் கொடுமையும் ஷைத்தான் தீங்கும் நீங்கும். |
| சூரா முஸம்மில் | - கஷ்டம் நீங்க ஓதுவது. |
| சூரா பாதிஹா | - சர்வரோக நிவாரணி. |
| குல்சூரா நான்கு | - படுக்கையில் வழமையாக ஓதுவது. |

ஆதாரம் : ''மன்ஸில்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநபி பற்றி மாமறை

01. முஹம்மது நபி (ஸல்) ஒரு தூதரேயன்றி மரணிக்காமல் இருக்கக்கூடிய ஆண்டவன் அல்லர். 3:114

02, அவனே தன்னுடைய தூதரை நேரான வழியைக் கொண்டும் உண்மையான மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பிவைத்தான். 48:28

03. எங்கள் இறைவனே!............அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கக்கூடிய தூதரை அவர்களிடையே எழுந்தருளச் செய்வாயாக! - நபி (ஸல்) அவர்களைப்பற்றி இப்றாகிம் (அலை) பிரார்த்தனை. 2:129

04. ''எனக்குப்பின்னர் அஹ்மத் என்னும் பெயர் கொண்ட ஒரு தூதர் வருவது பற்றியும் நான் உங்களுக்கு நன்மாராயங்கூறுகிறேன்'' நபி ஈஸா (அலை) முன்னறிவிப்பு. 61 ; 06

05. (ஆகவே அவர்களில்) எவர்கள் எழுத்தாற்றல் அற்ற நம் தூதராகிய இந்த நபியை பின்பற்றுகிறார்களோ அவர்கள் தங்களிடமுள்ள தௌறாத்திலும், இன்ஜீலிலும் இவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள். 7 : 157

06. ............''ஆனால் அவரே அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு கடைசி முத்திரையாகவும் இறுதி நபியாகவும் இருக்கிறார். 33 : 40

07. ............பரிசுத்தமான ஆகமங்களை ஓதிக்காண்பிக்கக்கூடியவர் அல்லாஹ்வுடைய இந்தத் தூதர்தான். 98:2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. எவர் (அவரை) விசுவாசித்து நற்கருமங்கள் செய்கின்றார்களோ அவர்கள் சிருஷ்டிகளில் நிச்சயமாக சிரேஷ்டமானவர்கள். அவர்களுடைய கூலி அவர்களின் இறைவனிடத்திலுள்ள நிலையான சுவனபதியாகும்.

09. அல்லாஹ் விசுவாசிகளின்மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களிலிருந்தே எழுந்தருளச் செய்தான். அவர் அவர்களுக்கு அவனுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கின்றார். அன்றி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கின்றார்.
3: 164

10. விசுவாசிகளே! உங்களிலிருந்து நிச்சயமாக நம்முடைய ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் கஷ்டத்திற்குள்ளாகிவிட்டால் அவருக்கு மிக்க வருத்தமாகவே இருக்கும். அன்றி உங்களைப் பெரிதும் விரும்புபவராகவும் விசுவாசிகள் மீது மிக்க அன்பும் கிருபையும் உடையோராகவும் இருக்கின்றார்.
லகத் ஜாஅகும் ..ரசூலும்............ 10: 129

11. 'வமா அர்சல்னாக இல்லா றஹ்மதுல்லில் ஆலமீன்' (நபியே) நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஒரு அருளாகவே அனுப்பி இருக்கிறோம். 21:107

12. உங்களுடைய ஆண்களில் எவருக்கும் முஹம்மது தகப்பனாக இருக்கவில்லை. (அவர் ஜைதுக்கும் தகப்பனில்லை) அவர் அல்லாஹ்வுடைய தூதர் நபிமார்களுக்கு முத்திரை. இறுதி நபி. 33 : 40

13. நபியே! நிச்சயமாக உம்மை நாம் (மனிதர்களுக்கு) சாட்சியாகவும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கிறோம்.

14. வேதத்தையுடையவர்களே! உங்களுக்குத் தெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக அறிவிக்கக் கூடிய நம்முடைய (இத்) தூதர் நிச்சயமாக உங்களிடம் வந்துவிட்டார். 5: 19

15. அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கிருக்கின்றது. அவர்கள் அவரைப்பின்பற்றி அல்லாஹ்வை அதிகமாக நினைத்து (துதிசெய்து) கொண்டிருப்பார்கள் 33: 21

16. விசுவாசிகளுக்கு அவர்களைவிட நபிதான் மிகப் பிரதானமானவர். அவருடைய மனைவியர் அவர்களின் அன்னையர்கள்...........

17. (நபியே) நீர் கூறும்; மனிதர்களே! நான் உங்களுக்குப் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவனே (யன்றி வேறில்லை) 22 : 49

18. (நபியே! நன்மை செய்வோருக்கு) இவ்வுண்மையின் மூலம் நீர் நன்மாராயம் கூறும்படியாகவும், பாவிகட்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் நாம் உம்மை அனுப்பிவைத்திருக்கிறோம். ஆகவே நரகவாசிகளைப்பற்றி நீர் கேட்கப்படமாட்டீர்.

2 : 119

19. நபி இப்றாகிமின் துஆ என்ன?
"எங்கள் றப்பே என் சந்ததிகளாகிய அவர்களுக்கு உன்னுடைய வசனங்களை ஓதிக்காண்பித்து வேதத்தையும் ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கக்கூடிய ஒரு தூதரை அவர்களிடயிருந்தே, அவர்களிடையே எழுந்தருளச் செய்வாயாக!

20. "நிச்சயமாக அல்லாஹ் என் பாதுகாவலன் அவனே இவ்வேதத்தை எனக்கு அருள் புரிந்தான் அவன் நல்லடியார்களின் பாதுகாவலன். 7 : 196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் மறையின் விஞ்ஞான வித்துக்கள்

01. அல்லாஹ் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து, அர்ஷின் மீது தனது ஆட்சியை நிலை நிறுத்தினான்.

02. அவனே இரவால் பகலையும் - பகலால் இரவையும் மூடுகின்றான்.

03. அது தீவிரமாகவே அதனைப் பின் தொடர்கிறது.

04. சூரியன், சந்திரன், நட்சத்திரங்களும் அவன் கட்டளைக்கு உட்பட்டிருக்கின்றன.

05. படைப்பு படைத்தலும், அதன் ஆட்சியும் அல்லாஹ்வுக்குரியன.

06. இவ்வளவு பெரிய பூமியை இரண்டே நாட்களில் படைத்தான் அல்லாஹ்.

07. அதன் மீது உயரமான மலைகளை அமைத்து சகல பாக்கியங்களையும் புரிந்தான்.

08. அதில் வசிப்போருக்கு வேண்டிய ஆகாரத்தை 4 நாட்களுக்குள் திட்டமிட்டான்.

09. புகை மண்டலமாக இருந்த வானத்தளவில் திரும்பி (அதனைப் படைத்து) அதனையும் பூமியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நோக்கி 'நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வழிபட்டு என்னிடம் வாருங்கள் என்று கூறினான். அதற்கவைகள் 'இதோ நாங்கள் விருப்பத்துடனேயே வந்தோம்.' என்று கூறின

10. ஆறு நாட்களில் 7 வானங்களைத் திட்டமிட்டு அவைகளின் கடமைகளை அறிவித்தான். பூமிக்குச் சமீபமாக உள்ள வானத்தை நட்சத்திர விளக்குகளைக் கொண்டு அலங்கரித்து அதனைப் பாது காப்பாகவும் ஆக்கினோம்.

11. உங்களுக்காக நட்சத்திரங்களை அமைத்தவனும் அவனே. தரையிலும் கடலிலும் உள்ள இருள்களில் அவைகளைக் கொண்டு வழியறிந்து செல்கிறீர்கள்...........

12. ஆரம்பத்தில் ஒன்றாகச் சேர்ந்திருந்த வானங்களையும் பூமியையும் நாமே பிரித்தமைத்தோம். என்பதையும் உயிருள்ள ஒவ்வொன்றையும் நீரிலிருந்து படைத்தோம். 21 : 30

13. பூமி மனிதர்களுடன் சாய்ந்துவிடாதிருக்கும் பொருட்டு அதில் மலைகளை நாம் நாட்டினோம், அவர்கள் விரும்பிய இடத்திற்குச் செல்லும் பொருட்டு அதில் விசாலமான வழிகளை களையும் நாம் ஏற்படுத்தினோம்......... 21:31

14. வானத்தைப் பத்திரமான ஒரு விதானத்தைப் போலும் நாம் அமைத்தோம். 21 : 32

15. அவனே இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் சிருஷ்டித்தான். இவை வானத்தில் தங்களுடைய வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன.. ... ..... 21 : 33

16. இறந்து பொட்டலாகிக் கிடக்கும் பூமியும் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்கு ஓர் அத்தாட்சியாகும். அதனை நாமே (மழையைக் கொண்டு உயிர்ப்பித்து அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகிறோம்...... 36 : 33

17. இரவும் இவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும். அதிலிருந்தே நாம் பகலை வெளிப்படுத்துகிறோம். இன்றேல் இவர்கள் இருளில் மூழ்கிவிடுவார்கள். 36 : 37

18. தன்னுடைய வரையறைக்குள் (தவறாமல்) செல்லும் சூரியனும் ஓர் அத்தாட்சியாகும். இதுயாவையும் நன்கறிந்தோனும், மிகைத்தோனுமால் விதிக்கப்பட்டதாகும். 36:38

19. (உலர்ந்து வளைந்த) பழைய பேரீச்சம் கம்பைப் போல் (பிறையாக) ஆகும் வரை சந்திரனுக்கு நாம் பல பட்சங்களை ஏற்படுத்தியிருக்கின்றோம். 36:39

20. சூரியன் சந்திரனை அணுக முடியாது. இரவு, பகலை முந்த முடியாது. (இவ்வாறே கிரகங்களும் நட்சத்திரங்களும்) தன் வட்டவரைக்குள் நீந்திச் செல்கின்றன. 36 : 40

21. கப்பல் நிறைய மனிதச் சந்ததிகளை சுமந்து செல்வதும் நிச்சயமாக அவர்களுக்கு ஓர் அத்தாட்சி ஆகும். 36 : 41

22. வானத்தைப் பத்திரமான ஒரு விதானத்தைப் போல் நாம் அமைத்தோம்.

23. வளி மண்டலம், பல்வேறு படை மண்டலங்களாக அமைவுற்றுள்ளன.

24. காற்றுக்களை பல கோணங்களில் திருப்பி விடுவதிலும், வானத்துக்கும் பூமிக்குமிடையில் கட்டுப்படுத்தப் பெற்றிருக்கும் கருமேகத்திலும், அல்லாஹ்வின் அன்பும், அருளும் நிச்சயமாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. அல்லாஹ்தான் பல பாகங்களிலும் சிதறிக் கிடக்கும் மேகங்கள் ஒன்று சேர்த்து ஒன்றன் மேல் ஒன்றாக வும் அடுக்குகின்றான். பின்னர் அம்மேகங்களின் மத்தியிலிருந்து மழையைப் பொழியப் பண்ணு கின்றான். அவனேமேகத்திலிருந்து ஆலங்கட்டிக் கல்மாரியையும் வருசிக்கச் செய்கின்றான். 24 : 48

26. அல்லாஹ்தான் காற்றுக்களை அனுப்பி மேகங்களை ஒட்டி அவன் விரும்பியவாறு வானத்தில் பரப்பி மழையை வருசிக்கச் செய்கின்றான். 30 : 43

27. அவன்தான் தன் அருள்மாரிக்கு முன்னதாக குளிர்ந்த காற்றை நன்மாராயமாக அனுப்பி வைக்கிறான். நாம் தான் மேகத்திலிருந்து பரிசுத்த தண்ணீரை வருசிக்கச் செய்து இறந்த பூமிக்கு அதனைக் கொண்டு நாம் ஜீவனளித்து நம்முடைய சிருஷ்டிக ளில் ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற ஜீவராசிகளுக் கும் அதனைப் புகட்டுகின்றோம். 13 : 17

28. (அவர்கள்) வசிக்கும் பூமியை அதன் சுற்றுப்புறங் களில் நாம் படிப்படியாக குறைத்து வருவதை அவர்கள் காணவில்லையா? 13 : 41

29 பயத்தையும் நயத்தையும் தரக்கூடிய மின்னலை அவனே உங்கள் முன் பிரகாசிக்கச் செய்கிறான். (மழையைச் சுமந்த பளுவான மேகங்களையும் அவனே கிளப்புகிறான். 13 : 12

30. இரவையும் பகலையும் இரு அத்தாட்சிகளாக்கி னோம் இரவின் அத்தாட்சிகளை மங்கச் செய் தோம். நீங்கள் உங்கள் இறைவனின் அருளைத் தேடிக் கொள்வதற்காக பகலின் அத்தாட்சிகளைப் பிரகாசமாக்கினோம் ஆண்டுகளின் எண்ணிக்கையை யும் மாதங்களின் கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்வதற்காக ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விவரித்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல் குர்ஆன்
# தீன்வழி நிற்போம்

முன் பதிந்த அழகிய சூரா பாதிஹா
எழில் மிகு வசனங்கள் ஏழு
அல்குர் ஆனின் அடிநாதம் அவை
தொல்புகழ் தொழுகையின் தனித்துவமும் அதுவே

தீனின் இதயம் தொழுகையே ஆகும்
ஈமானின் தொட்டிலும் அதுவே
அவனது அருள்பெற்று ஒளியுறச் செய்ய
நாமும் தொழுவோம் அவன் வழிநடப்போம்

அல்குர்ஆன் உண்மையின் வழிகாட்டி
ஈருலக வாழ்க்கையின் ஒளிவிளக்கு அதுவே
உண்மையை ஓதுக்குவோர் விழிப்புலனற்றோர்
அன்னவர் இதயம் இறுகியே விட்டது

ஏ! மனிதா உன் நிலைதான் என்ன?
புவியினில் பரமனின் பிரதிநிதி நீயே!
அமரர்களுக் கடுத்த உயர்வும் உனதே!
ஆயினும் நீயோ பாவத்தின் புதையல்

உண்மையும் உறுதியும் உயர்நிலை பெற்றிட
மென்மையாம் மனோநிலை என்றுமே தேவை
வாழ்வும் மறைவும் வல்லவன் கரத்தில்
வென்றிட எவரும் முயலவே கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்நிலை உயர்குணம் உயர்வழி மூன்றும்
துயர்நிலை போக்கி தூயோன் அருள் சேரும்
முஸ்லிமின் முழுவாழ்வும் மேலவன் தந்த
இஸ்லாமின் வழியில் இயைந்திட வேண்டும்

முத்துநபி முஸ்தபா முழுமையாய்த் தந்த
சத்திய இஸ்லாம் நமது ஸிராத்தாகும்
ஹக்கனின் ஆணைக்கு அடிபணிந் தொழுகி
மிக்கவே இனித்திடும் பிர்தௌஸ் நுழைவோம்

சத்தியம் இதுவென சாற்றும் இஸ்லாம்
முத்திபெற மக்களை அழைக்கிறது
முஸ்லிம் மக்கள் மேதினியில் ஒன்றாகி
இஸ்லாம் வகுத்த இறைவழி நடப்போம்

சொல்லிலும் செயலிலும் உண்மையே மிளிரட்டும்
தொல்லைதரும் சுயநலமதொலைந்தே போகட்டும்
இறையருள் பெற்று ஈருலக இன்பம் பெற
மறையருள் போதனையை மகிழ்வுடன் பேணுவோம்

பாலைவனத்திலே இஸ்மாயீல் பாதம் பதிய
சில்லெனப் பாய்ந்த ஸம் ஸம்
எல்லையில்லா ஆண்டுகள் ஓடியும்
வல்லவன் குதரத்தை வழுத்தியே நிற்கும்

மக்கநகர் மாநபியின் மண்குடிசை இல்லம்
ஹக்கனது வஹீவளமாக வளர்ந்த பெருவீடு
ஆமினாவின் அருமை மகன் அகமதுவின்
மெய்மை மலர் மேனியரின் மேலான இல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லன நன்றே நயம்பட முடியும்
பொல்லாப் பிணிகள் பொசுங்கியே போகும்
உண்மை ஒன்றே உலகினை வெல்லும்
பொய்மை யாவும் பூதலத் தழிந்தே போகும்

சுத்தம் பரிசுத்தம் பக்தியின் அடிநாதம்
பக்தி பொங்க பரவசம் சுரக்க
ஓதுவோம் திருமறை நாளும்
சாத்வீகம் துணைநிற்க வாழ்வோம் வாரீர்

பெண்மைக்கும் அனாதைக்கும் பேரன்பு காட்டிடு
உண்மையை வென்றிட உறுதியாய் நின்றிடு
பெற்றோர் உற்றோர் உறவினர் ஆயினும்
மாற்று வழிநின்று சத்தியத்தை வென்றிடு

மானிடர்க் கோர் மணிவிளக்காம் முகம்மத்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்
அல்லாஹ்வின் அருள்மறையை ஓதி ஓதி
அஞ்ஞான இருளோட்டி மெஞ்ஞான மேற்றினார்

அல்குர்ஆன் கூறிடும் அசல்வழி நின்று
பொல்லா உலகின் பிணியதைப் பொசுக்குவோம்
சத்திய வேதம் சகத்தினில் நிலைக்க
புத்தியைத் தீட்டி தீன்வழி நிற்போம்

# THE HOLY QURAN

**Mowlana A. Yusuf Ali**

**அவர்களின் ஆங்கில கவிதைகளின் தழுவல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| முன்னுரை | நல்கனார்கள் | நல்கினார்கள் |
| 4 - 25 | வலாதுஷ்ரிக | வலாதுஷ்ரிக் |
| 11 - 32 | யஸ்ஸர் | யஸ்ஸர்னல் |
| 17. | ஷுஹுபுல் | ஷுஃபுல் |
| 18. | ரக்காத்து | ரகஅத் |
| 20. | சொன்னயம் | சொல்நயம் |
| 23. | ஒலுவுடன் | வுழுவுடன் |
| 25. | அல்ஹிகிமத் | அல் ஹிக்மத் |
| | மதன் | மதனீ |
| 26. | மன்ஸுஹ் | நாஸிஹ் மன்ஸுஹ் |
| 29. | உஸுலே | உஸுலுல் |
| 29. | ஸபபேநுஸுல் | ஸபபுன்நுஸுல் |
| 29. | ஷைகுதந்தாவி | தப்ஸீர்தந்தாவி |
| 29. | ரினாலில் | பீழிலாலில் |
| 29. | இல்முல்பயான் | தெளிவுஞானக்கலை |
| 30. | பஹ்லவி | திஹ்லவி |
| 34. | கல்பில் | கல்புல் |

34 பின்னிணைப்பு : சூராமுஅவ்வதனைதன் - பலக் - நான் சூராக்கள் சூனியத்திலிருந்து பாதுகாப்பு தருவன.

13718

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org